காலமாக இருந்து வருகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகிய சென்னை மாநகராட்சி எங்களுக்கு அத்தகைய உரிமைகளை மறுக்கிறது என்றால், நீங்கள் அதற்கு இசைவு தருவதாக இருந்தால் அந்த வட்டார விவசாயிகளை ஹைகோர்ட்டிலே சந்திக்க வேண்டிவரும். ஆகவே, அரசாங்கம் முன்வந்து, சென்னை மாநகராட்சியை அந்த 'நோ-அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்' தரும்படியாகச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை அரசு உணருகிறது. அதுபற்றி மாநகராட்சியுடன் மறுபடியும் தொடர்பு கொள்ளலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

மாயூரம் வட்டத்திலுள்ள சாலைகள்

*** 309 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் நிதி ஆண்டில் மாயூரம் தாலுகாவில் அரசு நெடுஞ்சாலைத்துறை மேற்கொண்ட சாலைகள் எவையெவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாயூரம் தாலுக்காவிலுள்ள கீழ்க்காணும் இரண்டு சாலைகளை 1971-72 ஆம் ஆண்டு முதல் சீர்செய்வதற்கும், பராமரிப்பதற்கும், நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டது:—

(1) ஆக்கூர்-முக்கூட்டு-சின்னன்குடி சாலை—4 மைல்.

(2) மாப்படுகை-கடலங்குடி சாலை—9 மைல் 2 பர்லாங்கு.

*** 310 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள 2 ஆம் எண் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?